
Rs: 20/=

# JUNIOR COMPUTER TIMES



ජූනියර් කොම්පියුටර් ටයිම්ස්

ஜூனியர் கம்பியூட்டர் ரைம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான கம்பியூட்டர் வகுப்புக்கள்

நீங்கள் உங்கள் அன்புச் செல்வங்களை எங்களிடம் அழைத்து வாருங்கள். நாங்கள் அவர்களை நாளைய உலகான கணினி யுகத்துக்கு இன்றே அழைத்துச் செல்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளை இன்றே இணையுங்கள். பிரபல கணினி எழுத்தாளரான வே. நவமோகனின் (கணினிப்பித்தன்) நேரடி வழிகாட்டலில், 'ஜூனியர் கம்பியூட்டர் ரைம்ஸ்' ஆசிரியர்கள், எழுத்தாளர்களால் நடாத்தப்படுகின்றன.

| JUNIOR COMPUTER CLASSES | | | |
|---|---|---|---|
| AGE | 3 -5 | - | A Group |
| AGE | 6-9 | - | B Group |
| AGE | 10-15 | - | C Group |
| AGE | 16 | - | D Group |

**மாதாந்தக் கட்டணம் ரூ. 500 மட்டுமே**

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. அவர்களை கணினி உலகுக்கு அழைத்துச் செல்வதற்கு தயாராக உள்ள எங்களோடு இணையுங்கள்.

# Kids classes

**ஏன் நீங்கள் எங்களைத் தெரிவு செய்ய வேண்டும்?**

- ☑ அனுபவம் மிக்க கற்பித்தலில் திறமையுள்ள விரிவுரையாளர்கள்
- ☑ சிறந்த ஆசிரியர் குழுவின் வழிகாட்டல்கள்
- ☑ திட்டமிட்ட கற்பித்தல் திட்டம்
- ☑ வேறெங்குமில்லாத வித்தியாசமான கற்பித்தல்
- ☑ தரமான சான்றிதழ்
- ☑ ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
- ☑ போதனைகளுடன் கூடிய போதிய செய்கை நேரங்கள்
- ☑ எழுத்து மூல கற்பித்தல்

நாளை என்பது இன்றைத் தவறவிடுவதாகும். குறிப்பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவார்கள் என்பதால் இன்றே இணையுங்கள்.

## வெப் இன்டர்நஷனல்

**7/3 ரூபன் பீரிஸ் மாவத்தை,**

**களுபோவில,**

**தெஹிவளை**

**078-666608**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

web INTERNATIONAL

# ஜூனியர் கம்பியூட்டர் ரைம்ஸ்

பூ : 01 இதழ் : 01



## படிக்கலாம் வாருங்கள்...


| | |
|---|---|
| படங்களைப் பார்த்து பதிலளிப்போம் | 2 |
| விண்டோஸ் - ஒரு திறவுகோல் | 3 |
| இணையம் - மின்னஞ்சல் | 4 |
| எழுத்துருக்களை இனங்காணுதல் | 5 |
| கணினியின் உடலும் உயிரும் | 6 |
| கணினிக்குக் கணினி தாவும் வைரஸ்கள் | 7 |
| பெயின்ட் பிரஷ் - அறிமுகம் | 8 |
| கலைச்சொற்கள் | 10 |
| படங்களில் பதில்கள்... | 11 |
| ஐகன்களுக்குப் பெயரிடுவோம் | 12 |
| இ-மெயில் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போது.... | 13 |
| மெயில் பொக்ஸ்கள் | 14 |
| நாளைய உலகம் | 15 |
| சிறுவர் சினிமா | 16 |


ஆசிரியர் : வே. நவமோகன்




இன்று கணினிகளைப் பெரிய கடைகளிலும், வங்கிகளிலும், விமான நிலையங்களிலும் ஏன்? பாடசாலைகளில் கூடக் கண்டிருப்பீர்கள்.

சிறுவர், சிறுமியர்களே! உங்கள் அப்பா, அம்மா வேலை செய்கின்ற அலுவலகங்களில் கணினிகள் இருக்கலாம்.

உங்கள் சிலருடைய வீடுகளில் கூட கணினி இருக்கலாம். கணினி பற்றி அறிந்து கொள்ள கணினி ஒன்றைச் சொந்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

உங்களை கணினி பற்றி அறிந்த முழுமையானவர்களாக, புதிய நூற்றாண்டின் அறிவாளிகளாக வளர்த்தெடுக்கும் பொறுப்பை நாம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

இன்றைய அறிவியல் விஞ்ஞான வளர்ச்சியில் பல விடயங்கள் உங்களுக்கு அதிசயமாக இருக்கலாம். இவை அதிசயங்களும் இல்லை. அற்புதங்களும் இல்லை. அவை எவை என்பதை வழிகாட்டி விளக்கவே வெளிவருகிறது "ஜூனியர் கம்பியூட்டர் ரைம்ஸ்".

இன்றைய நவீன உலகில் கணினி, இணையம் பற்றிய அறிவு சார்ந்த விடயங்களை அனைவரும் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். இவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாத நிலையானது நாம் எம்மையே பின் தங்கிய நிலைக்கு இட்டுச் செல்வதாகும்.

எனவே, கணினி கற்காவிடினும், கணினி பற்றி வெளிவருகின்ற சஞ்சிகைகள், நூல்கள், ஆக்கங்களைக் கற்பது அவசியமாகும்.

குறிப்பாக ஆரம்ப நிலையாளர்களுக்கும், சிறுவர்களுக்குமாக மாதாந்தம் வெளிவரவுள்ள எமது இந்தச் சஞ்சிகையைத் தொடர்ந்து கற்பதனால் நிச்சயமாக நீங்களும் இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் காலடி எடுத்து வைக்கப் போகிறீர்கள்.

(வளரும்...)

ஜூனியர்
கம்பியூட்டர் ரைம்ஸ்
த. பெ. இல. : 64,
தெஹிவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களைப் பார்த்து பதிலளிப்போம்


கணினித்திரை ஒன்றில் நீங்கள் தினமும் காணும் உருக்களை இங்கே தந்துள்ளோம். இவற்றினை அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய வகையில் சில குறிப்புக்களையும் அருகே வழங்கியுள்ளோம். விடையளியுங்கள் பார்ப்போம்.


படங்களை வரைவதற்கு சிறுவர்களால் பயன்படுத்தப்படும் இந்த அப்ளிகேஷன் பிரபலமான ஒன்று.



கடிதங்களை ரைப் செய்வதற்கு உதவும் இந்த அப்ளிகேஷன் மைக்ரோசொ∴ப்ட் நிறுவனத்தினது.



மைக்ரோசொ∴ப்ட் ஒ∴பிஸ் தொகுப்பிலுள்ள இந்த அப்ளிகேஷனைப் பயன்படுத்திக் கணக்குகள், வரைபுகளைச் செய்ய முடியும்.


கீபோர்ட்டிலுள்ள இந்தக் கீயின் பெயரில் ஒரு பிரபலமான ஒப்பரேட்டிங் சிஸ்டம் உண்டு.


தகவல்களைச் சேமித்து வைக்கக்கூடிய ஒரு கையடக்க சாதனம்.


கணினித்திரையில் தெரிவதை ஹார்ட் கொப்பி (*Hard copy*) எடுப்பதற்குப் பயன்படும் சாதனம்.



பல ∴பைல்களைக் கொண்டிருக்கும் இதன் நிறம் பொதுவாக மஞ்சள் நிறமாகும்.



கணினியில் உள்ள கொள்ளளவு கூடிய (பெரிய) ∴பைல்களை இந்த புரோகிராமின் மூலம் சுருக்குவார்கள்.



கணினியில் தொலைத்த ∴பைல்; ∴போல்டர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவும் ஒரு கட்டளை.


இணைய வலம் வர உதவும் ஒரு உலவி (*Browser*). விண்டோஸ்டன் வருகிறது.


கணினியினுள் டிலீட் செய்யப்படும் ∴பைல்கள் இதனுள் தான் தற்காலிகமாகச் சேமிக்கப்பட்டிருக்கும்.

(விடைகள் அடுத்த இதழில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்டோஸ் 1


## - ஒரு திறவுகோல்

கணினி இயங்குவதற்கு மிகவும் முக்கியமானது 'ஒப்பரேட்டிங் சிஸ்ரம்' (Operating System) ஆகும். ஒப்பரேட்டிங் சிஸ்ரம் இன்றிக் கணினியை இயக்க முடியாது. இன்று உலகிலுள்ள பெரும்பாலான கணினிகளில் பயன்படுத்தப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்ரமாக விளங்குவது தான் விண்டோஸ் (Windows) ஒப்பரேட்டிங் சிஸ்ரமாகும். மைக்ரோசொ∴ப்ற் (Microsoft) நிறுவனத்தினால் வெளியிடப்படும் இந்த ஒப்பரேட்டிங் சிஸ்ரம் கணினியைப் பயன்படுத்தும் 90 வீதமானோரால் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



படம் 1

மைக்ரோசொ∴ப்ற் நிறுவனம் விண்டோஸ் 3.0 இல் ஆரம்பித்து விண்டோஸ் 3.0, 3.1, 3.11, 95, 98, 2000, NT, Me, XP என அடுத்தடுத்து பதிப்புகளை வெளியிட்டது.




படம் 2

இருந்தபோதிலும் விண்டோஸ் 95 / 98 ஒப்பரேட்டிங் சிஸ்ரங்கள் இன்றும் பிரபலமானவையாக விளங்குகின்றன. இந்த இதழிலிருந்து விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் ஒன்றை எவ்வாறு பயன்படுத்துவதெனப் பார்ப்போம்.

### கணினியைத் திறத்தல்

முதலில், கணினி ஒன்றை ஓன் (on) செய்வோம். கணினிக்கு மின் இணைப்பைக் கொடுத்த பின் சிபியு (CPU) எனப்படும் மையச்செயலகத்தில் இருக்கும் பவர் (Power) பட்டினை அழுத்துங்கள் (படம் 1). மொனிட்டர் (Monitor) எனப்படும் கணினித்திரை ஓன் (On) செய்யப்படாமலிருந்தால் அதையும் ஓன் செய்யுங்கள். இனி, கணினித்திரையில் உங்கள் கணினி பூட் (Boot) ஆவதைக் காண்பீர்கள். சிறிது நேரத்தின் பின் மெல்லிய நீல நிறத்துடனான அழகிய விண்டோஸ் திரை தோன்றும்




படம் 3

(படம் 2). இதைத் தொடர்ந்து டெஸ்க்ரொப் (Desktop) திரை தோன்றும் (படம் 3). அதில் காணப்படும் உருக்கள் ஐகன் (Icon) கள் என அழைக்கப்படும். இவை உங்கள் கணினியிலுள்ள ∴பைல்களாகவோ, புரோகிராம்கள், அப்ளிகேஷன்களுக்குரியதாகவோ இருக்கலாம். இவற்றில் டபிள் கிளிக் செய்வதன் மூலம் குறிப்பிட்ட புரோகிராம் அல்லது அப்ளிகேஷனை இலகுவாகத் திறந்து கொள்ளலாம்.

டெஸ்க்ரொப்பின் கீழ்ப்பகுதியில் குறித்துக் காட்டப்பட்டிருப்பது ராஸ்க்பார் (Task bar) ஆகும். இதன் இடது மூலையில் காணப்படுவது ஸ்ரார்ட் (Start) பட்டின் எனப்படும். இதனை கிளிக் செய்தால் தோன்றும் மெனுவை ஸ்ரார்ட் மெனு (Start Menu) என்பர். இதனூடாகச் சென்று புரோகிராம்கள், அப்ளிகேஷன்களைத் திறந்து கொள்ளலாம்.

இது தொடர்பான மேலும் பல விடயங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையம் மின்னஞ்சல்

## இணையம்

இணையம், மின்னஞ்சல் என்னும் சொற்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கேள்விப் படாவிட்டாலும் பரவாயில்லை. இதைப் படியுங்கள்.

வலைப்பின்னல் (Network) என்பது மற்றவர்களின் கணினிகளிலுள்ள விடயங்களை நாம் அறிந்து கொள்வதற்கும், எமது தகவல்களை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குமென கணினிகள் மூலம் ஏற்படுத்தப்படும் ஒரு அமைப்பு ஆகும். இதைப் போன்ற பல வலைப்பின்னல்களின் இணைப்பே இணையம் எனப்படுகின்றது.

அமெரிக்காவிலுள்ள கணினியொன்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை எமது நாட்டிலிருந்து படிப்பதற்கு இணையம் உதவுகின்றது.

அந்தத் தகவல் ஒரு கடிதமாகவோ, கட்டுரையாகவோ, நூலாகவோ, படமாகவோ, ஏன் ஒலியாகவோ இருக்கலாம்.

இன்று இணையத்தில் பாடம் கற்கலாம், பத்திரிகை படிக்கலாம், பாடல் கேட்கலாம், படம் பார்க்கலாம், பொருட்கள் வாங்கலாம், வெளிநாடுகளில் உள்ள உறவினர்களோடு உரையாடலாம்.

இணையத்தின் பயனை இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

## மின்னஞ்சல்

வெளிநாடு ஒன்றிலுள்ள உங்கள் அப்பாவுடனோ, உறவினர், நண்பர்களுடனோ உடனுக்குடன் கணினி மூலம் கடிதங்களைப் பரிமாறப் பயன்படுவது தான் மின்னஞ்சல் ஆகும்.

ஒவ்வொருவருக்கும் எவ்வாறு தபால் முகவரிகள் உள்ளனவோ, அதேபோன்று மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்கி வைத்திருப்பவர்களுக்குக் கடிதங்களைக் கணினியில் தட்டச்சு (Type) செய்து அனுப்புவதே இந்த மின்னஞ்சல்.

நத்தை வேகத்தில் போகும் சாதாரண கடிதங்களைப் போலல்லாது நாம் கடிதம் அனுப்பிய மறுநொடியே உரியவர்களிடம் மின்னல் வேகத்தில் போவது தான் மின்னஞ்சல் ஆகும்.

## தொலைபேசியால் தொல்லையா?



தொலைபேசிகள் வைத்திருப்பவர்கள் சிஎல்ஐ (CLI) பற்றிப் பேசிக்கொள்வார்கள். “CLI” என்பது Caller Line Identification என்பதன் சுருக்கமாகும். இதன் மூலம் உங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களில் அழைப்பவரது இலக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.


தொலைபேசியில் வரும் வேண்டாத அழைப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும், தொலைபேசியில் அழைப்புக்களை எடுத்து வேண்டாத தொந்தரவுகள் செய்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் இது பேருதவி செய்கிறது.

செலூலர் தொலைபேசிகள் எனப்படும் கையடக்கத் தொலைபேசிகளுக்கு மட்டுமன்றி இன்று ரெலிக்கொம் போன்ற கம்பியிணைப்பு தொலைபேசிகளுக்கும் (Land phone) இந்த வசதி வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எழுத்துருக்களை இனங்காணுதல்

கீழுள்ள சொற்கள் ஒவ்வொன்றிலும் ஒரு எழுத்து வித்தியாசமான எழுத்துரு (Font) ஆக அமைந்துள்ளது. அதில் வரவேண்டிய சரியான எழுத்துருவை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.




கணினி

க க க க



விசைப்பலகை

ப ப ப ப



கணினித்திரை

தி தி தி தி



சொடுக்கி

கி கி கி கி



அச்சுப்பொறி

அ அ அ அ



வன்தட்டு

த த த த

[விடைகள் 13 ஆம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கணினியின் உடலும் உயிரும்

ஒரு மனிதனுக்கு உடலும் உயிரும் எவ்வளவு அவசியமோ அதுபோன்று தான் கணினி தொழிற்பட மென்பொருள்கள், வன்பொருட்கள் அவசியமாகும்.


மனித உடல் போல் தொட்டுணரக் கூடியவை கணினியின் வன்பொருட்கள் (Hardwares) ஆகும். இதை வன்பொருள் எனத் தமிழில் அழைக்கலாம்.

மனித உயிர் போல் தொட்டுணர முடியாத ஆனால் கணினிகளின் உள்ளேயே இருந்து கணினியை இயக்குவது மென்பொருள் (Software) ஆகும்.


கணினியின் உள்ளே காணப்படும் மதர்போர்ட் (Motherboard), ஹார்ட் டிஸ்க் (Hard disk), ரம் (Ram), ரொம் (Rom) போன்ற கருவிகளும் வெளியில் காணக்கூடிய கீபோர்ட், மவுஸ், மொனிட்டர் போன்ற கருவிகளும் வன்பொருட்கள் ஆகும்.



கணினியை இயக்கத் தேவையான விண்டோஸ் போன்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரங்களும், கணினியில் இயங்கக்கூடிய பெயின்ட் பிரஷ் (Paint brush), வேர்ட் (Word) போன்ற அப்ளிகேஷன்களும் மென்பொருள்கள் ஆகும்.



## பிழை திருத்துவோம்



பிரியன் கணினியில் வன்பொருள்கள் (Hardware) சிலவற்றின் பெயர்களை ரைப் செய்தான். ஆனால், கணினி அச்சொற்கள் சிலவற்றில் எழுத்துப் பிழைகள் இருப்பதாகக் காட்டியது. அதை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? முயற்சி செய்து பாருங்கள்.

1. Flopy Dics
2. Moniter
3. Keyboard
4. Printer
5. CD RAM
6. Hart Disc
7. Speaker
8. Mouce
9. Mathor board
10. Chiep
11. Sannar
12. Modam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிக்குக் கணினி தாவும் வைரஸ்கள்


'என் கணினியில் வைரஸ் புகுந்து விட்டது. முக்கியமான புரோகிராம் ஒன்று அழிந்து போய்விட்டது.' என்று உங்கள் அப்பாவோ, அண்ணாவோ, அக்காவோ கதைப்பதைக் கேட்டிருப்பீர்கள். அந்த வைரஸ் எப்படி இருக்கும்? கண்ணால் பார்க்க முடியாதா? அது எப்படி புரோகிராம்களை அழிக்கும்? என்றெல்லாம் பல சந்தேகங்கள் உங்களில் முளை விட்டிருக்கலாம்.

அவ்வாறெனில் இதைப் படியுங்கள். தெளிவடைவீர்கள். ''வைரஸ்'' அதாவது 'கணினி வைரஸ்' என்பது உண்மையில் ஒரு கிருமியோ, நுண்ணுயிரோ அல்ல. தவறான, தீய நோக்கங்களைக் கருதி மனிதரால் எழுதப்படும் ஒரு புரோகிராம் தான் இந்த கணினி வைரஸ்கள் ஆகும். இதை ஒரு தொற்று நோய் என்று கூட விவரிக்கலாம்.

கணினி ஒன்றில் எவ்வித அனுமதியுமின்றி தானாகவே புகுந்து விடும் இந்த வைரஸ் புரோகிராம்கள், கணினியிலுள்ள மிக முக்கிய ∴பைல்கள் மற்றும் புரோகிராம்கள் போன்றவற்றை ஈவிரக்கமின்றி அழித்து விடுகின்றன. VIRUS என்பதற்கு Very Important Resource Under Siege என விளக்கமளிக்கப்படுகிறது. அதாவது, மிக் முக்கிய பகுதிகள் முற்றுகையிடப்படல் என்பதாகும்.

∴பிரெட் கொஹென் (Fred Cohen) என்ற ஒரு பேராசிரியரே இவ்வாறு கணினிகளைத் தாக்கும் புரோகிராம்களுக்கு Virus என்ற பெயரைச் சூட்டினார்.

'எனது கணினியை வேறு யாரும் பயன்படுத்துவதில்லையே. ஆனாலும் வைரஸ் தாக்கி விட்டதே' என யோசிப்பீர்கள். வைரஸை வேறு ஒருவர் தான் உங்கள் கணினியில் புகுத்த வேண்டும் என்றில்லை. அது பல வடிவங்களூடாக உங்கள் கணினியை வந்தடையலாம். உதாரணமாக, வைரஸினால் பாதிக்கப்பட்ட கணினியிலிருந்து ∴பைல் (File) ஒன்றை ∴பிளோப்பி (Floppy) ஒன்றில் கொப்பி செய்து கொண்டு வந்து உங்கள் கணினியில் போடுகிறீர்கள். குறிப்பிட்ட வைரஸ் தானாகவே அந்த ∴பிளோப்பியில் தன்னையும் கொப்பி செய்து கொண்டு, உங்கள் கணினியினுள் அழையா விருந்தாளியாக நுழைந்து விடும்.



நீங்கள் இணையம் (Internet), மின்னஞ்சல் (E-mail) போன்றவற்றைப் பயன்படுத்துபவராயின் இவற்றின் மூலம் வைரஸ் பரவுவதற்குரிய சாத்தியங்கள் தான் மிக மிக அதிகம். உலகின் எங்கோ ஒரு மூலையிலிருக்கும் ஒருவர் தனது திறமையால் வைரஸ் புரோகிராம்களை எழுதி அழகான கவர்ச்சியான தலைப்புகளுடன் உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். அதை ஆர்வத்துடன் திறந்து பார்க்கும் உங்களுக்கு ஆபத்து காத்திருக்கும். எனவே, அறிமுகமில்லாதவர்களிடமிருந்து வரும் மின்னஞ்சல்கள் எவ்வளவு தான் உங்களைக் கவர்ந்தாலும்.. கவனம்!! அவற்றைத் திறந்து உங்கள் கணினியை வைரஸ் பாதிப்புக்குள்ளாக்க வேண்டாம்.

இதற்கு மாற்று வழியே இல்லையா என்கிறீர்களா? இருக்கவே இருக்கிறது. அவைதான் வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்கள் (Anti Virus Programs). உங்கள் கணினியை வைரஸ் தாக்குவதிலிருந்து பாதுகாப்பதற்காக உருவாக்கப்படுபவை தான் இந்த வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்கள். இன்று நோட்டன் (Norton), மெகா∴பி (McAfee) போன்ற பல வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்கள் கிடைக்கின்றன. இவற்றை உங்கள் கணினியில் இன்ஸ்ரோல் (Install) செய்து பயன்படுத்துவதன் மூலம் வைரஸ் பாதிப்பிலிருந்து ஓரளவு தப்ப முடியும்.

உங்கள் கணினியைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை இந்த அன்ரி வைரஸ் புரோகிராம்கள் மூலம் ஸ்கான் (Scan) செய்து கணினியின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதே போன்று ∴பிளோப்பிகளைப் பயன்படுத்தும் போது அவற்றை வைரஸ் ஸ்கான் செய்து வைரஸ் இல்லை என்று தெரிந்த பின்பே அவற்றைப் பயன்படுத்துங்கள். இவ்வாறான சில தற்காப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வைரஸ் பாதிப்பிலிருந்து உங்கள் கணினியைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.


**வாசக இதயங்களே!**

**இச்சஞ்சிகை தொடர்பான உங்கள் கருத்துக்களையும், ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.**

**மேலும், கணினி தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தபாலட்டை ஒன்றில் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அடுத்த இதழில் பதிலளிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெயின்ட் பிரஷ் - அறிமுகம்

இன்று பெரும்பாலான கணினிப் பயிற்சி நிலையங்களில் சிறுவர்களுக்கான கணினிப் பயிற்சியில் பிரதான பங்கை வகிப்பது பெயின்ட்" (Paint) அப்ளிகேஷன் தான்.

மவுஸைப் பயன்படுத்தி கறுப்பு, வெள்ளை மற்றும் கலர்படங்களை சாதாரண தாளில் வரைவதைப் போல் வரைந்து கொள்ள முடிவதால் சிறுவர்கள் ஆர்வத்துடன் பெயின்ட்டைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு வரையப்படும் படங்கள் கணினியில் பிட்மப் (Bitmap) வகை ஃபைல் (File) ஆக சேவ் (Save) செய்யப்படும்.

பெயின்ட் அப்ளிகேஷனை ஓப்பின் (Open) செய்வதற்கு, டெஸ்க்ரொப்பில் ஸ்ரார்ட் (Start) பட்டினில் கிளிக் செய்து வரும் மெனுவில் புரோகிராம்ஸ் (Programs) என்பதைக் கிளிக் செய்யுங்கள்.


வரும் சப் மெனுவில் அக்ஸெஸரீஸ் (Accessories) என்பதைக் கிளிக் செய்யுங்கள். வரும் சப் மெனுவில் பெயின்ட் (Paint) என்பதைக் கிளிக் செய்யுங்கள் (படம் 1). பெயின்ட் விண்டோ ஓப்பின் ஆகும் (படம் 2).

பெயின்ட் விண்டோவின் மேற்பகுதியில் குறித்துக் காட்டப்பட்டிருப்பது ரைட்டில் பார் (Title bar) ஆகும்.

ரைட்டில் பாரின் வலதுமேல் மூலையில் காணப்படும் மூன்று சிறிய பட்டின்களும் கொன்ரோல் பட்டின்கள் (Control buttons) எனப்படும்.


ரைட்டில் பாரின் கீழுள்ள பார் மெனு பார் (Menu bar) ஆகும். இதில், ஃபைல் (File), எடிட் (Edit), வியூ (View), இமேஜ் (Image), கலர்ஸ் (Colors), ஹெல்ப் (Help) போன்ற பல மெனுக்கள் காணப்படும்.

பெயின்ட் விண்டோவின் வலது பக்கத்தில் காணப்படும் வெண்



படம் 1

திரை ட்ரோயிங் ஏரியா (Drawing area) எனப்படும். இடது பக்கம் காட்டப்பட்டிருப்பது பெயின்ட ரூல்




படம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்ஸ் (Paint toolbox) எனப் படும்.


பெயின்ட் ரூல் பொக்ஸ் படங்களை வரைவதற்கான பல ரூல்களைக் கொண்டிருக்கும். அவை (படம் 3) இல் குறித்துக் காட்டப் பட்டுள்ளன.

இந்த ரூல் பொக்ஸில் தேவை யான ரூலின் மேல் மவுஸ் பொயின் ட்ரால் கிளிக் செய்து பயன்படுத்த முடியும்.

உதாரணமாக, இந்த ரூல் மவுஸை நகர்த்துவதன் மூலம் அழித்துக் கொள்ள முடியும்.

அதேபோல் லைன் (Line) ரூல் மூலம் நேரான கோடுகளையும், கேர்வ் (Curve) ரூல் மூலம் வளை வுகளையும் வரைந்து கொள்ளலாம்.

ரெக்ராங்கிள் (Rectangle) ரூல் செவ்வகங்களையும், எலிப்ஸ் (Ellipse) ரூல் வட்டங்கள் போன்ற வடிவங்களையும் வரைந்து கொள் ளப்பயன்படும்.




படம் 3

பொக்ஸில் பிரதானமானது பென்சில் (Pencil) ஆகும். இதைக் கிளிக் செய்வதன் மூலம் சாதாரண தாளில் பென்சிலால் படங்களை வரைவது போன்று கணினியின் திரையில் வரைய முடியும்.

அவ்வாறு வரையும் போது ஏற் படும் தவறுகளை அழிக்க வேண்டுமாயின் இறேஸர் (Eraser) ரூலில் கிளிக் செய்யுங்கள். மவுஸ் பொயின்டரின் வடிவம் மாறும். இந்த நிலையில் தேவையற்றதை

பெயின்ட் விண்டோவின் கீழ்ப் பகுதியில் காணப்படுவது கலர் பொக்ஸ் (Color box) ஆகும். (இது படம் 2 இல் குறித்துக் காட்டப் பட்டுள்ளது.) வடிவங்கள், கோடு கள், படங்கள் போன்றவற்றை நிறங்களில் வரைய விரும்பினால், தேவையான நிறத்தின் மேல் மவுஸ் பொயின்டரால் கிளிக் செய்து, பின் தேவையான ரூலில் கிளிக் செய்து நிறங்களில் வரைந்து கொள்ள முடியும்.



முதலாவது பேர்சனல் கம்பியூட்டர் (Personal Computer) 1981 ஆம் ஆண்டில் ஐபிஎம் (IBM) நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

இதன் பின்னரே உலகில் கணினிப்புரட்சி ஒன்று ஏற்பட்டது. பி.சி. (PC) என அழைக்கப்படும் இந்த பேர்சனல் கம்பியூட்டர்கள் மேசை மேல் வைக்கக் கூடியதாகவோ அல்லது எடுத்துச் செல்லக் கூடியதாக்வோ இருக்கும்.

புதிய சந்தாத்திட்டம்

மாதம் ஒரு முறை மலரவுள்ள இந்த சிறுவர் கணினிச் சஞ்சிகை உங்கள் அன்புச் செல்வங் களுக்கான அறிவுச் சொத்துக்கள். எனவே, ஒன்றைக் கூடத் தவற விடாமல் வீட்டிலிருந்தே ஜூனி யரை பெற்றுக்கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்!

மாதிரிப் படிவம்

பெயர் : ________

முகவரி : ________

________

________

________

தொலைபேசி இல: ________

இ.மெயில்: ________

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - | ரூ. 240 |
| இரு வருடம் | - | ரூ. 480 |
| மூன்று வருடம் | - | ரூ. 720 |
| நான்கு வருடம் | - | ரூ. 960 |

நான் இத்துடன் ---------- இற்கான காசோலை/காசுக்கட்டளை இல.:-------------------- ஐ "Gayathri Publication" என்ற பெயருக்கு அனுப்பிவைக்கிறேன்.

◆ காசுக்கட்டளைகளை களுபோவில (Kalubowila) தபால கத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :

JUNIOR COMPUTER TIMES
P. O. BOX 64,
DEHIWELA,
SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இச்சஞ்சிகையில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| Computer | - கம்பியூட்டர் | - கணினி |
| Hardware | - ஹார்ட்வெயர் | - வன்பொருள் |
| Software | - சொ.்.ப்ட்வெயர் | - மென்பொருள் |
| Internet | - இன்டர்நெட் | - இணையம் |
| E-mail | - இ-மெயில் | - மின்னஞ்சல் |
| Monitor | - மொனிட்டர் | - கணினித்திரை |
| Keyboard | - கீபோர்ட் | - விசைப்பலகை |
| Mouse | - மவுஸ் | - சொடுக்கி |
| Printer | - பிரிண்டர் | - அச்சுப்பொறி |
| Scanner | - ஸ்கானர் | - வருடி |
| Hard disk | - ஹார்ட் டிஸ்க் | - வன்தட்டு |
| Floppy disk | - .்.பிளோப்பி டிஸ்க் | - மென்தட்டு |
| CPU | - சிபியு | - மையச்செயலகம் |
| Pointer | - பொயின்ரர் | - காட்டி |
| Browser | - பிறவுஸர் | - உலவி |
| Input Device | - இன்புட் டிவைஸ் | - உட்செலுத்தும் கருவி |
| Output Device | - அவுட்புட் டிவைஸ் | - வெளிச்செலுத்தும் கருவி |

## சீடியை தானாகச் செயற்பட வைப்பதற்கு....

ஸ்ராரட் (Start) → செற்றிங்ஸ் (Settings)→ கொன்ரோல் பனல் (Control Panel) ஊடாக சிஸ்ரம் (System) என்பதை டபிள் கிளிக் செய்யுங்கள். சிஸ்ரம் புரோப்பட்டீஸ் (System Properties) டயலொக் பொக்ஸ் ஓப்பின் ஆகும்.

அதில், டிவைஸ் மனேஜர் (Device Manager) ரப் (Tab) ஐக் கிளிக் செய்யுங்கள். அதில் CD ROM இற்கு அருகிலிருக்கும் ⊞ குறியீட்டைக் கிளிக் செய்து, நீங்கள் பயன்படுத்த விரும்பும் டிவைஸ் (Device) ஐ ரைட் கிளிக் (Right Click) செய்யவும். தோன்றும் மெனுவில் புரோப்பட்டீஸ் (Properties) என்பதைக் கிளிக் செய்யவும். தோன்றும் புரோப்பட்டீஸ் (Properties) டயலொக் பொக்ஸில் செற்றிங்ஸ் (Settings) ரப்பைக் கிளிக் செய்யுங்கள். பின், ஓட்டோ இன்சேர்ட் நோட்டி.்.பிகேஷன் (Auto Insert notification) என்பதன் அருகிலுள்ள செக் பொக்ஸைக் கிளிக் செய்யவும்.

இனி, சீடியை சீடி ரொம் ட்ரைவினுள் செலுத்தியதும் அது தானாகவே செயற்படும். இந்த செற்றிங்கின் மூலம் கேம் (Game) சீடிக்கள், மல்ட்டிமீடியா (Multimedia) மற்றும் ஓடியோ (Audio) போன்ற அனைத்து சீடிக்களும் தானாகச் செயற்படும்.

சீடி தானாகச் செயற்படுவதை நிறுத்த விரும்பினால், சீடி ட்ரைவினுள் சீடியை நுழைக்கும் போது ஷி.்.ப்ற் (Shift) கீயை அழுத்தினால் சீடி தானாகச் செயற்படாது. இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான்.

நிரந்தரமாக இதைச் செய்வதற்கு, ஓட்டோ இன்சேர்ட் நோட்டி.்.பிகேஷன் என்பதன் அருகிலுள்ள செக் பொக்ஸை அக்ரிவ் (Active) இல்லாது செய்து விடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களில் பதில்கள்...

(1) கணினியில் நீங்கள் தினமும் இவ்வாறு குறியீடுகள் தோன்றுவதைக் கண்டிருப்பீர்கள். இந்த உருக்கள் தோன்றும் பெட்டிகளை எவ்வாறு அழைப்பார்கள்?



(4) கணினித்திரையில், டெஸ்க்ரொப்பில் காணப்படும் ஐகன்களுடன் ஐகன்களாகக் காணப்படும் இவற்றை எவ்வாறு அழைக்கலாம்?




(2) கணினித்திரையில், டெஸ்க்ரொப்பின் கீழ் மூலையில் ராஸ்க் பாரில் நேரம் காட்டிக் கொண்டிருக்கும் இதை எவ்வாறு அழைப்பார்கள்?





(5) கணினியில், பல்வேறு கணக்குகளைப் பார்க்க முடியும். அவற்றுக்குக் கீழுள் எவற்றில் எந்தக் குறியீட்டைப் பயன்படுத்த முடியாது?

+ x - * /

(3) இந்த உருக்களில் ஒன்றையாயினும் நீங்கள் பயன்படுத்தும் பிரபலமான மென்பொருள்களில் பார்த்திருப்பீர்கள். அந்த மென்பொருள்கள் எவை? இவற்றை என்ன பெயர் கொண்டு அழைப்பார்கள்?



(6) நீங்கள் கணினியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, சொடுக்கியின் (Mouse) காட்டி (Pointer) கீழுள் ளது போல் பல வடிவங்களில் மாறுவதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், இவற்றில் ஒன்று தவறானது ஆகும். அவ்வாறு காட்டி ஒருபோதும் தோன்றாது. அது எது?




# பிட்ஸ் ஃபோர் கிட்ஸ் (Bits For Kids)

- மவுஸ் ஒரு உட்செலுத்தும் கருவி.
- ஃபிளோப்பி டிஸ்க்களைப் போல இன்று சந்தையில் கிடைக்கும் சில சீடிக்களையும் ஃபோமற் செய்து பயன்படுத்த முடியும்.
- மைக்ரோசொஃப்ற் நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸ் (Bill Gates).
- ஃபோல்டர் ஒன்றில் எத்தனை ஃபைல் களையோ சப் ஃபோல்டர்களையோ போட முடியும்.
- கணினிகளுக்குத் தெரிந்த எண்கள் 0, 1 ஆகிய இரண்டும் மட்டுமே. இவை பைனரி (Binary) எண்கள் எனப்படும்.
- விண்டோஸ் (Windows) என்பது ஒரு ஒப்ப ரேட்டிங் சிஸ்ரமாகும்.
- வன்தட்டு (Hard disk) ஒன்றைப் பல பகுதிகளாக (C:\, D:\, E:\) பிரிக்க முடியும்.
- இன்டர்நெட்டில் உள்ள தகவல்களை நமது கணினியில் ஏற்றிக் கொள்வதைப் பதிவேற்றல் (Upload) என்பார்கள்.
- ஃபிளோப்பிகளிலுள்ள தகவல்களைப் பாதுகாப்பதை ரைட் புரொடெக்ட் (Write Protect) என்பார்கள்.
- இ-மெயில் (E - mail) என்பது Electronic mail என்பதன் சுருக்கமாகும்.
- விண்டோஸ் எக்ஸ்பி (Windows XP) என்பது அண்மையில் மைக்ரோசொஃப்ற் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஒப்பரேட்டிங் சிஸ்ரமாகும்.
- முதலாவது தமிழ்நெற் மாநாடு 1997ஆம் ஆண்டு ஜுன் மாதம் சிங்கப்பூரில் நடத்தப் பட்டது.
- இணையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் (Tamil Virtual University) வெப்தள முகவரி : www.tamilvu.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐகன்களுக்குப் பெயரிடுவோம்

கிருத்திகாவின் கணினியில் புகுந்த வைரஸ் டெஸ்க்ரொப்பில் காணப்படும் ஐகன்களின் பெயர்களை அழித்துவிட்டது. அந்த ஐகன்களின் பெயர்களை கீழே தந்துள்ளோம். ஐகன்களின் பெயர்களுக்குரிய இலக்கங்களை ஐகன்களின் கீழே எழுதுங்கள்.




(1) WinZip
(2) Microsoft Excel
(3) Network Neighborhood
(4) My Computer
(5) Connect to the Internet
(6) Paint
(7) My Documents
(8) New Folder
(9) Microsoft FrontPage
(10) Internet Explorer
(11) Adobe PageMaker 6.5
(12) Microsoft Outlook (2)
(13) Microsoft PowerPoint
(14) Adobe Photoshop 6.0
(15) Microsoft Outlook
(16) ACDSee 32
(17) Recycle Bin
(18) Microsoft Access
(19) Setup MSN Internet Access
(20) Microsoft Word



[விடைகள் 14 ஆம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ-மெயில் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போது....

**- ZIP CODE**

ஸிப் கோட் "Zip Code" என்பது புதிய இ-மெயில் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போது எல்லோருக்கும் ஏற்படக்கூடிய ஒரு சிக்கல் ஆகும்.

இலங்கையில் தபால் அலுவலகங்களுக்கென தபால் குறியீட்டு முறை தொண்ணூறுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறான குறியீட்டு முறைகளில் ஒன்று தான் "Zip Code" ஆகும்.

அமெரிக்காவிலுள்ள பல்வேறு ஸ்ரேட் (State) களையும் பல அலகுகளாகப் பிரித்து அவற்றை விருத்தி செய்யும் நோக்கில் ஸோன் இம்ப்ரூவ்மென்ட் புரொஜெக்ட் (Zone Improvement Project) உருவாக்கப்பட்டது. இதன் சுருக்கமே Zip ஆகும். இதுவே, தபால் முகவரிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும்.

இந்த "Zip Code" முறை அமெரிக்காவில் மட்டுமல்ல, அதன் காலனி நாடுகளிலும் அதன் ஆதிக்கமுடையதாயிருந்த நாடுகளிலும் இன்றும் காணப்படுகின்றன. உதாரணமாக, பசுபிக் தீவுகளின் கூட்டாட்சி நாடான மைக்ரோனேஷியா (Micronesia) இலும் காணப்படுகின்றன.

உதாரணமாக முகவரி ஒன்றைப் பார்ப்போம்...

Mr. S. A. Jhon,
P. O. Box # 1616,
Colonia, Yap.
(FM 96943)

இறுதியில் அடைப்புக்குறியில் எழுதப்பட்டுள்ளதே "Zip Code". இதில் FM என்பது "Federated State of Micronesia" என்பதன் சுருக்கமாகும்.

இலங்கையில் தபால் குறியீட்டு முறை இருந்தாலும் அது "Zip Code" அல்ல. அவ்வாறெனில், நாம் இது பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியமென்ன என்று நீங்கள் நினைக்கலாம்.

புதிதாக இ-மெயில் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போது நீங்கள் வழங்கவேண்டிய உங்களைப் பற்றிய தகவல்களில் பெயர், முகவரிகளோடு "Zip Code" ஐயும் வழங்க வேண்டியிருக்கும்.

இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் "Zip Code" என்பதில் எந்தவொரு இலக்கத்தையும் வழங்காது விடின் உங்கள் கணக்கை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே, உங்கள் பகுதிக்குரிய தபால் குறியீட்டு இலக்கத்தையோ விரும்பிய வேறு ஏதாவது இலக்கங்களையோ வழங்கலாம்.

## கணினியும் அதன் பாகங்களும்

கணினி பல பகுதிகளைக் கொண்டிருக்கும். அவற்றை இதில் குறித்துக் காட்டியுள்ளோம்.




## 5 ஆம் பக்க விடைகள்

கணினி — க க க க — **கணினி**

விசைப்பலகை — ப ப ப ப — **விசைப்பலகை**

கணினித்திரை — தி தி தி தி — **கணினித்திரை**

சொடுக்கி — கி கி கி கி — **சொடுக்கி**


அச்சுப்பொறி — அ அ அ அ — **அச்சுப்பொறி**

வன்தட்டு — த த த த — **வன்தட்டு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெயில் பொக்ஸ்கள்

## நிஜமும் நிழலும்

இந்தச் சஞ்சிகை வெளியீட்டாளர்களின் முகவரி :

P. O. Box No : 64,
Dehiwela,
Sri Lanka.

என அமைந்துள்ளது. இதே போன்று P. O. Box இலக்கங்களைப் பெரிய நிறுவனங்களின் முகவரிகளில், பத்திரிகை விளம்பரங்களில் பார்த்திருப்பீர்கள்.

தபால் பெட்டி இலக்கம் (Post Office Box Number) என்பதையே P. O. Box No. எனச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றனர்.

பலருக்கு இந்த "P. O. Box" என்பது என்னவென்று தெரிந்திருப்பதில்லை. சிலர் வீடுகளின் முகப்பில், வாசலில் மரத்தபால் பெட்டிகளை மாட்டி அதில் வீட்டு இலக்கங்களை எழுதியிருப்பார்கள். இதுதானா தபால் பெட்டி இலக்கம்? இல்லவே இல்லை.

தினமும் நிறையக் கடிதங்களைப் பெறுகின்ற நிறுவனங்கள் தபாலகங்களில் ஆண்டு தோறும் பணம் செலுத்தி அங்கே தங்களுக்கென ஒரு தபாற்பெட்டியைப் பெற்று வைத்திருப்பார்கள். அந்த நிறுவனத்துக்கு வரும் தபால்களை தபாலகத்திலேயே எண்கள் வாரியாகப் பிரித்து அந்த பெட்டியில் போட்டு வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட பெட்டியிலுள்ள அஞ்சல்களை அப்பெட்டிக்குரிய நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டும் போய் விரும்பிய பொழுதில் எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறே, ஒவ்வொரு மின்னஞ்சல் கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் மெயில் பொக்ஸ் (Mail Box) இருக்கும். இங்கேயே அவர்கள் பெயருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் (E-mail) போடப்பட்டிருக்கும்.


எனவே, ஒருவர் தனது மின்னஞ்சல் கணக்கைத் திறப்பதன் மூலம் தனக்கு வந்துள்ள மின்னஞ்சல்களைப் படிக்க முடியும்.

ஆனால், அவர் பிறருடைய கடிதங்களைப் பார்வையிட முடியாது.

## என்ன வித்தியாசம் ???

1




2



மேலே காணப்படுபவை "றீசைக்கிள் பின்" உடைய ஐகன்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால், இவை இரண்டும் வித்தியாசமாக உள்ளது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? முதலாவது படத்தில் றீசைக்கிள் பின்னுள் அழிக்கப்பட்ட எவையும் சேமிக்கப்படவில்லை. இரண்டாவது படத்தில், அழிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஃபைல் அல்லது ஃபோல்டர்கள் காணப்படுகின்றன.

## ஐகன்களுக்குப் பெயரிடுவோம்

*விடைகள்*







இதில், மைக்ரோசொஃப்ட் அவுட்லுக் **(Microsoft Outlook)** இன் இரண்டு ஐகன்கள் காணப்படுகின்றன. இவ்வாறு எத்தனை ஐகன்களை வேண்டுமானாலும் நீங்கள் உருவாக்க முடியும். எனவே, **12, 15** என்னும் விடைகள் மாறியும் வரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய உலகம்

ஆரம்ப காலங்களில் பாறைகளிலும், மரங்களிலும் எழுதிய மனிதன், பின் ஓலைகளிலும், தகடுகளிலும் எழுதத் தொடங்கினான். அன்று பயன்படுத்தப்பட்ட எழுத்தாணி, ஓலை தான் இன்றைய எழுத்துத்துறையின் அத்திபாரமாகக் கருதப்படுகின்றது.

கடதாசி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கடதாசியிலும், கணினி கண்டுபிடிக்கப்பட்ட பின் தகவல்களைக் கணினியின் ஹார்ட் டிஸ்க்கிலும், ஃபிளோப்பி டிஸ்க்கிலும் இன்று சீடியிலும் எழுதி வருகிறான்.

முன்பெல்லாம் கரி கொண்டு சுவர்களிலும், சிலைகளிலும் எழுதிய குழந்தைகள் இன்று பென்சில், பேனைகளையும் விட்டு மவுஸின் துணையுடன் கணினித் திரையான மொனிட்டரிலேயே கீறியும், எழுதியும் விளையாடுகின்றன.




இவ்வாறான, வசதியுடைய பெயின்ட் (Paint) போன்ற மென்பொருள்கள் நிறையவே வெளிவந்துவிட்டன. இன்று பல மென்பொருள்கள் கணினிகளுடன் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

இரண்டு வயதுக் குழந்தை முதல் இயலாமையால் படுத்திருக்கும் முதியோர் வரை கல்வியை இந்தக் கணினி மூலம் மேற்கொள்ள இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகம் வழி சமைத்துத் தந்திருக்கிறது.

இன்னும் சில தசாப்தங்களில் அதிபர், ஆசிரியர்கள் இல்லாத பாடசாலை உங்கள் வீட்டு அறைகளிலேயே வரப்போகின்றது. அங்கே மாணவர் குழாம் இருக்காது. இன்றைய மழலைகளே மாணவர்கள். கணினியே ஆசிரியர்!

தனிப்பட்ட (Individual) வகுப்புக்களுக்கென, ஆசிரியர்களுக்குப் பெரும் பணம் கொடுத்துத் தினமும் அலுக்க வேண்டியும் இராது. வீட்டுக்குள்ளேயே கல்வி, பாடம் நடத்த கணினி ரோபோக்கள் இவற்றை வாங்கி வைத்துக் கொண்டாலே போதும்.

அப்போது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு பெற்றோர்கள் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்க வேண்டிய தேவையும் இருக்காது.

இணையம் வழியாகத் தான் பரீட்சைப் புள்ளிகள் வெளியிடப்படும். மின்னஞ்சல் வழியாகவே அவை அனுப்பியும் வைக்கப்படும்.

மேலை நாடுகளில் எப்படி அலுவலகமே செல்லாமல் கணினி மூலமே பணியாற்றுகிறார்களோ அவ்வாறானதொரு நிலைதான் எதிர்கால மாணவர்களுக்கு வரப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சினிமா



## புரூஸ்லி உயிர் பெறுகிறார்?

உங்களில் பலருக்கு புரூஸ்லியைத் தெரிந்திருக்கும். புரூஸ்லி படங்கள் ஒரு காலத்தில் மிகப் பிரபலமானவையாக இருந்தன. நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் புரூஸ்லியைப் போல எனக்கூறி சண்டை போட்டுக் கொள்வோம். புரூஸ்லி ஸ்ரிக்கர்கள் அந்த நாட்களில் எல்லோரிடமும் இருக்கும்.

இத்தனை பிரபலமான அந்த நிஜவீரன்; நடிகன் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இது நடந்து பல வருடங்களாகின்றன.... அதற்கென்ன என்கிறீர்களா?

மீண்டும், மயிர்கூச்செறியும் அந்த சண்டைக் காட்சிகளைத் தர புரூஸ்லி வருகிறார் என்றால் ஆச்சரியம் தானே.

ஆனால், இன்றைய கணினித் தொழில்நுட்பம் இதை உண்மையாக்கப் போகின்றது.

அண்மைக்காலங்களில் கிர.்பிக்ஸ் அனிமேஷன் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பல பக்திப் படங்கள் புத்துயிர் பெற்றிருப்பது போல இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியையும் கொண்டு 'புரூஸ்லி'யை உருவாக்க இருக்கிறார்கள்.

புதிய டிஜிட்டல் அனிமேஷன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'Dragon Warrior' என்னும் படத்தை கொரியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் பெரும் பணச் செலவில் தயாரிக்கின்றது.

நிஜ புரூஸ்லியை ஒத்த தோற்றமுடைய 'மார்ஷியல் ஆர்ஸ்' சாகசங்களையுடைய இத்திரைப்படம் அடுத்த ஓரிரு வருடங்களில் வெளிவரவுள்ளது.

பழைய புரூஸ்லி படங்களைப் பார்த்துப் பார்த்துச் சலித்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் தான்.

தொடர்ந்தும், இவ்வாறான முயற்சிகளில் பல பழைய பிரபல நடிகர்கள் மீண்டும் திரையுலகுக்கு வரவுள்ளனர்; வந்து கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல கணினி எழுத்தாளர் வே. நவமோகனின் வெளியீடுகள்

- ✓ இலகு தமிழில் HTML — விலை ரூ. 100
  (இணையப்பக்கங்களை வடிவமைப்பதற்கான விளக்கக் கையேடு)
- ✓ கணினி வழிகாட்டி -1 — விலை ரூ. 50
  (தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கான தொடர் வெளியீடு)
- ✓ கம்பியூட்டர் வேர்ல்ட்
- ✓ கணினி வழிகாட்டி - 2 (அச்சில்)
- ✓ வெப் டிரெக்ட்ரி - 2002 (அச்சில்)
- ✓ இலகு தமிழில் இன்டர்நெட் - (அச்சில்)
- ✓ கம்பியூட்டர் ரிப்ஸ் - (அச்சில்)
  (இலகு முறையில் கணினிக்கல்வி)

## எமது ஏனைய வெளியீடுகள்

- ✓ இலகு தமிழ் இலக்கணம் — விலை ரூ. 25
- ✓ மொழித்திறன்
  - 4000 ற்கும் மேற்பட்ட ஒத்த, எதிர்க்கருத்துச் சொற்கள் — விலை ரூ. 40
- ✓ தமிழ்த்தென்றல் (கவிதைத் தொகுதி) — விலை ரூ. 20
- ✓ O/L வழிகாட்டி (1 - 8) — விலை ரூ. 55
- ✓ O/L Guide (English) — விலை ரூ. 75
- ✓ புலமை வழிகாட்டி (புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வெளியீடு) — விலை ரூ. 30
- ✓ பரீட்சை மாதிரிகள் 2001 — விலை ரூ. 100
- ✓ எது? எப்படி? எதனால்? — விலை. ரூ. 55
- ✓ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (தரம் -7) — விலை ரூ. 85
- ✓ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (தரம் 10 -1) — விலை ரூ. 65


**காயத்திரி பப்ளிகேஷன்**

து. பெ. இல. 64,

தெஹிவளை,


✆ 078 - 666608



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rs: 20/=

# JUNIOR COMPUTER TIMES



ஜூனியர் கம்பியூட்டர் ரைம்ஸ்

ජූනියර් කොම්පියුටර් ටයිම්ස්

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org